ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜ

SRI VAISHNAVAN

உண்மை யறிவை உணர்த்தும்.

ஒருமாதாந்தரத்தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

தொகுதி 5. 1105-ம் ௵ பகுதி 7.

பிரமோதூத ௵ வைகாசி ௴

கடவுள் வணக்கம்

மற்புடைய வரைநெடுந் தோள் மன்னர் மாள
வடிவாய மழுவேந்தி யுலக மாண்டு
வெற்புடைய நெடுங்கடலுட் டனிவே லுய்த்த
வேள் முதலா வென்றானூர் விந்தமேய
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில் சூழ்நெடு மறுகிற் கமலவேலிப்
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
"பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே.

N. B நம் ஸ்ரீவைஷ்ணவன் ஆபீஸில் வேலைபார்த்து வந்த கோவிந்தக்கோன் சந்தாவசூலை ஆபீஸிடம் சரியாய் ஒப்புவிக்காமல் பலமோசடிகள் செய்திருப்பதால் அவனை 1—4—30 முதல் வேலையைவிட்டு நீக்கியிருக்கிறது. நேயர்கள் தெரிந்துகொள்ளவும்

ஸ்ரீ

ஸ்ரீவைஷ்ணவ தர்மம்

பக்தர் யார்?

(முன் 84-ம் பக்கத்தொடர்ச்சி)

" அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான் "

எனக்கூறிப்போந்தார். எல்லா ஜீவராசிகளிடத்தும் கருணையுள்ள மக்களையே பிராம்மணர்களென இங்ஙனம் குறிக்கப்பெற்றது. நற்குணங்கள் எல்லாவற்றினும் ஜீவகாருண்ணியமே சிறந்ததாகக்கருதப்படுதலால் அக்குணம் பெற்றோர்களே மேன்மையுற்றவர்களாகக் கொள்வது சாலவும் பொருத்தமேயாகும். நிற்க,

புவியரசர் போற்றும் கவியரசாகிய கம்பர் " பிராம்மணர் " எனப்பட்டவர்களின் இலக்ஷணங்களைக் குறிப்பிக்கும் கவிகளில் ஒன்றை ஈண்டு நோக்குவோம்.

" குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாறறலர்
கடை களிற்றையுங் காரிகை யாரையும்
அடைய வஞ்சி யந்தணர் முந்தினர் "

அயோத்திக்கரசாகிய தசரதன் சீதாபிராட்டியின் திருமணத்தை முன்னிட்டு நகரமாந்தர்களோடும் பரிவாரங்களோடும் மிதிலையை நாடிச்செல்லுங்கால் உடன்சென்ற பிராமணர்களின் இயல்பைப்பற்றி இக்கவி கூறுகின்றது. இதில் " குடையர் " என்றதால் இவர்கள் வாகனதிகளில் ஏறிச்செல்லாமல் கால்நடையாகவே சென்றார்களெனவும் " குண்டிகை தூக்கினர் " என்றதால் பரிசுத்ததிற்கு அவசியமாகவேண்டிய தீர்த்தத்தை இவர்கள் எப்போதும்

கைப்பற்றியிருந்தார்களெனவும், "சுந்திய நடையர்" என்றதால் வேகமாய் மிதித்து நடந்தால் தரையில் வரும் ஜந்துக்களான புழு எறும்பு முதலிய சிறுபிராணிகள் காலடியில் அடிபட்டு உயிரிழக்க நேரிடுமாதலின் அவ்விதம் நேரிடாவண்ணம் மெதுவாய் நடந்தார்களெனவும், " நாசி புதைத்தகை நாற்றலர் " என்றதால் இவர்கள் வழிநடந்து செல்லும்போதும் காலத்தை வீணாக்காமல் பிராணயாமத்திற்குரியரேசக, பூரககும்பகங்களைச்செய்து வந்தார்களெனவும் " கடைகளிறனையும் காரிகையாரையும், அடையவஞ்சி யந்தணர் முந்தினர் " என்றதால் போர் யானைகளும் மாதர்களும் நெருங்கி வருவதைக்கண்டு இவர்கள் இத்தர்ஸனததால் தங்கள் மனோநிலை திரிந்து தவத்திற்குக் கேடுவருமெனா அஞ்சிமுடுகிச் சென்றார்களெனவும் அறியக்கிடக்கின்றது.

இத்தால் பிராம்மணர்கள் சரீரசுகத்தைப் பிரதானமாய்க்கருது பவர்களல்ல வென்பதும், மிக்க ஆசாரமுடையவர்களென்பதும், மிருக்க ஜீவகாருண்ணிய முடையவர்களென்பதும், எப்போதும் மனத்தையொடுக்கி இறைவனைத்தியானிப்பவர்களென்பதும், புறம்பான சிற்றின்பங்களில் கண்வையார்களென்பதும் தெளிவாகின்றது.

இத்தகைய ஒழுக்கம் வாய்ந்தவர்களே பிராம்மணர்கள் ஆவார். இஃதன்றி ஒருயோக்கியதையுமற்ற சாமானியர்களைப் பிறவிகாரணமாகப் பிராம்மணர்களெனக்கூறுதல் தகாது, இதற்கோர் உதாரணம் கூறுகின்றோம். இக்காலத்தில் ஆங்கிலக்கல்வியில் பி— ஏ வகுப்பில் தேறியவர்களைப் பட்டதாரிகளென அழைக்கிறார்கள். அவர்கட்கு உயர்ந்த உத்தியோகம் கிடைக்கின்றது. பலர் அவர்கட்குக்கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். ஆனால் பி-ஏ வகுப்பில் தேறாதவர்களைப் பட்டதாரிகளென யாராவது கூறுவார்களா? உயர்ந்த அதிகாரம் அவர்கட்குக்கிடைக்குமா? கிடையாதல்லவா? அதுபோலவே பிராம்மணப்பதவியும் அதற்குரிய ஒழுக்கம் காரணமாக ஒருவனிடம் தங்குகிறது. மக்களுள் மேம்பட்டவனாய் விளங்குகிறான். அவ்வொழுக்கம் இல்லாவிட்டால் அப்

பதவி போய்விடுவதுமன்றி அதற்குரிய பெருமையும் போய் விடுகின்றது.

“ குளித்து மூன்றனலை யோம்பும் குறிக்கொளந்தணமைதன்னை
ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்
களிப்பதென் கொண்டுநம்பி! கடல்வண்ணா கதறுகின்றேன்
அளித்தெனக் கருள்செய் கண்டாய் அரங்கமாநகருளானே! ”

என தொண்டரடிப்பொடியாரும் அருளிப்போந்தார். இதில் “ குளித்து மூன்றனலை யோம்பும் குறிக்கொளந்தணமை ” என்றதால் பிராமணனது ஒழுக்கம் உணர்த்தப்பட்டது. பிராம்மணன் பிரதிதினம் ஸ்நானம் செய்து கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்கினியாகிற மூன்றுவகை அக்கினியைவளர்த்து பகவானை ஆராதிக்கவேண்டும் என்பது பொருள். அன்றியும் “ அந்தணமை ” என்றசொல்லினால் ஒழுக்கத்திற்கே உயர்வு கொடுத்திருப்பது தெளிவு. “ அந்தணமை தன்னை ஒளித்திட்டேன், என் கணில்லை ” என இவ்வாழ்வார் கூறியிருத்தலால் பிராம்மண ஒழுக்கத்தைச் செய்யாதவர்களிடம் பிராம்மணியம் இல்லையென்பது போதருகின்றது.

“ பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமை யால் ”.

பிறவி காரணமாக ஒருவனுக்கு மேன்மை தாழ்மை கற்பித்தல் கூடாதென்பதை இத்திருக்குறளும் வலியுறுத்தும். ஆதலால் பிறவிகாரணமாகப் பிராம்மணர் பெரியவர் என்ற மூடக்கொள்கையை ஒழித்துவிடும்படி உம்மை யான் கேட்டுக்கொள்கிறேன்.

பண்டரிநாதர்;— ஸ்வாமி! இவ்விஷயத்தை யான் முழுமனத்துடன் அங்கீகரிக்கின்றேன். ஒருவனது நல்லறிவு, நல்லொழுக்கங்களைக் கவனிக்காமல் பிறவியைக் கவனித்து உயர்வு தாழ்வு கற்பிப்பது கொடும்பாவமென்பதை யான் அறிவேன், ஆனால் பகவானது தரிசனத்திற்காக இங்குவந்து கூடியிருக்கிற பிராமணர்கள் மிகுந்த நல்லொழுக்கமுடையவர்கள். வைதிகநெறியில்

நிற்பவர்கள். எப்போதும் வேதமந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருப்பவர்கள், உயர் சாதிக்குரிய லக்ஷணங்கள் பெரும்பாலும் இவர்களிடம் மலிந்துகிடக்கின்றன. இத்தகைப்பெரியோர்களைப்பகவானது தரிசனத்திற்கு அருகதையற்றவர்களென த்தாங்கள் ஒதுக்கி வைத்திருப்பது மிக்க ஆச்சர்யமாயிருக்கிறது.

அனுமார்:— பக்தரே! இன்னும் உமக்கு சாதிப்பயித்தியம் தெளியவில்லைபோலும். பகவானது தரிசனத்திற்கு முன்னணியில் நிற்க அருகதையுடையவர்கள் பிராமணர்களென்றே நீர் கருதுகின்றீர். இது நம் தர்ஸனத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

பண்டரிநாதர்:— முன்னர் தாங்கள் கூறியபடி பிராமண ஒழுக்கத்தில் குறைவில்லாது அனுஷ்டித்து வரும் உண்மைப் பிராம்மணன் இதரசாதியினரைகாட்டிலும் மேம்பட்டவன் என்பதை வைஷ்ணவம் ஒத்துக்கொள்ளவில்லையா?

அனுமார்:— இல்லை பகவானிடம் அன்புபூண்ட பக்தர்கள் எச்சாதியினராயினும் அவர்களே பிராம்மணர்களிலும் உயர்ந்தவர்கள். அவர்களே பிராம்மணர்களைக்காட்டிலும் போற்றத் தக்கவர்கள். இதுவே வைஷ்ணவத்தின் முடிவு

பண்டரிநாதர்:— ஆயின் சாஸ்திரங்களில் மக்களை பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்று நான்கு வகையாகப்பிரித்து இவர்களில் பிராமணர்களை உயர்சாதியினராகக் கூறப்பட்டிருக்கின்றதே. இவ்வாக்கியங்கள் எழுந்ததின் நோக்கம் என்ன? இவைகள் வைஷ்ணவர்களால் அங்கீகரிக்கத்தக்கதா? அல்லது வெறுக்கத்தக்கதா?

அனுமார்:— ஒரு தேசத்தின் பரிபாலனத்திற்கு தோட்டி முதல் அரசன் வரையுள்ள ஊழியர்களும் பலதிறப்பட்ட தொழிலாளர்களும் வேண்டியிருத்தலால் அவ்வேலைகட்குமக்களின் அறிவுக்குத்தக்கபடி மக்களைத்தெரிந்தெடுப்பது அவசியமாயிற்று அவ்விதம் தெரிந்தெடுக்குமுறையே சாதிப்பிரிவாய் நம தேசத்தில் அமைந்துள்ளது. தேசத்தில் தொழிலகள்

செவ்வையாய் நடக்கும் பொருட்டே இப்பாகுபாடு உண்டு பண்ணப்பட்டது. இத்தொழில்களில் பிராம்மணரது தொழில் சிறிது வைதிக சம்பந்தம் பெற்றிருத்தலால் உயர்வாகக்கருதப் பட்டுளது.

பண்டரிநாதர்;— அங்ஙனமாயின்பிராம்மணர்களேயுயர்ந்தவர்களென ஒப்புக்கொள்ள வேண்டியது தானே?

அநுமார்;— நண்பரே! உலகில் மக்கள் உயிர் வாழ்வதற்கவசியமான தொழில்களை பரிபாலனம் செய்வதற்கே இச்சாதிப் பிரிவினை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் லௌகிக சம்பந்தமான தொழில்களையே இந்நால்வகைச் சாதியினரும் மேற்கொண்டிருக்கிறார்கள். இதன்றி பகவானிடம் பேரன்பு பூண்டு உலகெலாம அன்புசெலுத்தும் போதிஞர்களது செயல் இச்சாதி தர்மங்களைக்காட்டிலும் மிகச்சிறந்ததாகும். ஆதலால் இவர்கள் பிராமணார்களினும் பெரியோராய்க் கருதப்படுகிறார்கள்.

பண்டரிநாதர்;— ஸ்வாமி! லௌகிகம், வைதிகம் என்ற பதங்கட்குச் சரியான பொருள் விளங்கவில்லை, பிராம்மணர்கள் வேதமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு பகவானை வணங்கி வழிபடுகிறார்கள். எவ்வளவோ யக்ஞங்களைச் செய்கிறார்கள். ஜபதபங்களில் சிறந்திருக்கிறார்கள். இவர்களைச் சிறந்த பக்தர்களாகத் தாங்கள் கருதவில்லைபோலும்.

அநுமார்;— ஏதாவது ஒருபலத்தைக்கருதி பகவானை வணங்கி வழிபடுவது உண்மை அன்பின் செயலாகமாட்டாது. நிஷ்காமியமாகப் பக்திசெய்வதே அன்பின் செயலாகும் அவ்வன்பைக்கொண்டவர்களே உண்மை பக்தர்கள் ஆவார். பிராம்மணர்கள் தங்கள் சுயலாபத்தைக் கருதி எவ்வளவோ கிரியைகளைச் செய்கிறார்கள். அரசர்கட்கு சந்ததியை உண்டுபண்ண வேதமந்திரங்களைக்கொண்டு புத்திரகாமேஷ்டியைச் செய்கிறார்கள். ஆயுசுவிருத்திக்காக ஆயுஷ் ஹோமம்செய்கிறார்கள். மழை பெய்யும் பொருட்டு குடிகளிடம் தக்ஷிணைபெற்று வருண ஜபம் செய்கிறார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவந் நாம வைபவம்.

திண்டிவனம் (அமீன்) K. K. கோவிந்தராமாநுஜன் எழுதியது

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

ஒரு விஷயத்தை வரையப்புகின் இலக்கண இலக்கியங்களில் மிக்க பயிற்சியும் உலக அநுபவமும் ஒவ்வொரு மொழியும் எழுதப்புகும் விஷயத்திற்கு பொருத்தமானதே யென துணிவு கொண்ட பின்பே எழுதத்துணியவேண்டும். அம்முறையில் அடியேன் எவ்வளவு ஆற்றலுடையவனெனின் வரையப்புகும் விஷயமோ பெரியது, அறிவோ சிறியது, ஆசையோ அளவுகடந்தது, என் செய்வது! பாற்கடலை அடைந்த ஒருபூனையானது அதிலுள்ள பாலை முழுவதும் பருகி தன் ஆசையை தீர்த்துக்கொள்ள இயலாதெனினும் ஒன்று அல்லது இரண்டு முறையாவது தன் நாவினால் சுவைத்து இன்புறுவது போன்று அடியேன் இவ்விஷயத்தில் ப்ரவர்த்திக்கின்றனன். குற்றங்களைந்து குறைகளைந்து கைக்கொள்வது கற்றறிந்த சான்றோர்கடன்.

மேல் குறிப்பிட்ட பாசுரமானது " மயர்வற மதிநல மருளப் பெற்ற ஆழ்வார்கள் பதின்மருள் திருமங்கையடிகளால் அருளிச்

செய்யப்பெற்றதாமென்பதை ஸம்ப்ரதாய உணர்வுடையார் யாவரும் அறிந்துள்ளார் என்பதைக்கூறுவது மிகையாகாது. (ஏகஸ்வாது நபுஞ்ஜீத:) என்கிறபடி இவ்வுலகின் கண் எவராயினும் பெறுதற்கரிதான பொருளைப்பெற்றபோது தான்மாத்திரம் உண்டு அதனுலுரிய பயனைப்பெருது பலரும் அனுபவிக்கவேண்டுமென, எண்ணுபவர்போல், ஆழ்வார் உலக மக்கள் தங்களையும், ஏவலரையும் மறந்து ஈஸ்வரகைங்கர்யத்தையுமிழந்து அனர்த்தப்படுமளவிலே யாவரும பகவந் நாம வைபவத்தின் உண்மையை உணர்ந்து தான் பெற்ற பலனை பிறரும பெற்றுய்யுமாறு பேசுகிருர். இதனைச்சிறிது ஆராய்வாம் பரமகாருண்ணிகனை ஸர்வேஸ்வரனுல் காட்டக்கண்ட நலந்தரும் சொல்லாகிய நாராயண நாமவைபவத்தால் சீரிய குலத்தினைப்பெற்றேனென முதலில் உபக்ரமிக்கிருர். அன்பர்களே! உலகத்தில் ஒவ்வொருவரும் தலை தல்லகத ஒன்றே ஒவ்வொரு குலத்தினராக கருதப்பட்டு வருவது உலகறிந்த உண்மையாம. அங்ஙனமிருக்க ஆழ்வார் குலம் தருமென கூறுவதின் காரணம் நம்மாலறிய முடியாத ஓர் வகையில் பலரகஸ்ய பொருள் உள்ளடங்கி கிடக்கின்றதெனவே கொள்ளக்கிடக்கின்றது. சூத்திரனுய்ப்பிறந்தானெருவன்பகவத் ஸம்பந்தம் பெற்ருல் தனக்கு மேம்பட்டதாகிய வைசியகுலத்தைப் பெறலாகுமெனறுகொண்டாலும் வைசியனுயிருப்பவனுக்கு க்ஷத்திரியதர்மமும், க்ஷத்திரியனுக்கு ப்ராமண்ணியமும ப்ராமண்ணியனுக்கு இனி எந்தகுலம தேடவேண்டியிருக்கிறது எனவே அத்தகையபொருள கொள்வது இவ்விடத்தில பொருந்தாத தென்றும் பின்னொன்றெனக் கொளக்கிடக்கின்றதெனில் உலகினர் மாயவன் தன்னை வணங்கவைத்த காரணமென கருதில் கொள்ளாது கேவலமிருகங்களின வாசியின்றி " உண்டிக்கே வழிதேடி ஓடித்திரிதலும், ஓடிவந்தபின் உண்டேயிருத்தலும், காணமற்ற மனசீர் கழித்தலும் நாரீயர்மீது கண்ணோட்டம்வைத்தலும் பேணிய நல்லோர்மீது குற்றம் சுமத்தலும், பெருமைபேசி பிதற்றித்திரிதலும், வீண் அலைச்சலும் வீண்போது போக்குமாகிற அந்தகாரபிறப்பினை யொழித்ததும. (தொடரும்)

ஆண்டாள் துணை.

ஸ்ரீ ஆண்டாள் பிராட்டியின்

அருந்திறன்.

முன் 96-ம பக்கத்தொடர்ச்சி.

பெரும்பான்மையும் நோய்வருவது காற்று, தண்ணீர், உணவு ஆகிய மூன்றின் ஏற்றத்தாழ்வினால் நம் தேகத்திலிருந்து கழிய வேண்டிய அசுத்தப்பொருள்கள் சரிவரக்கழியாமையினாலேயேயாகும், இதைச்சரிபடுத்துவதற்கு இன்றியமையாதது தேகப்பயிற்சியேயாகும். பண்டைக்காலத்தில் கீழ்தரக்குடும்பங்களிலிருந்தவர்கள் நெல்குத்துதல். மிளகாய் இடித்தல், ஊர்க்கப்புறமுள்ள கிணறு குளங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவருதல், துணி துவைத்தல் முதலியவைகளையும், நடுத்தர குடும்பத்திலிருந்தோர் புறக்கடையிலுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்தல், தங்கள் துணிகளைத்தாங்களே துவைத்துக்கொள்ளுதல், சமையல் செய்தல், தங்கள் குடும்பத்தாருக்கு உணவருத்தல், மாலைப்பொழுதில் கோயிலுக்குச்செல்லுதல் முதலியவைகளையும், செல்வக்குடும்பத்திலிருந்தோர் தங்கள் புறக்கடையிலுள்ள நீர் நிலைகளில் நீந்தி விளையாடிக்குளித்தல், மலர்ச்சோலைமுழுதும் திரிந்து அழகான மலர்களைக்கொய்துமாலைதொடுத்துகடவுளுக்குச்சூட்டுதல், தோழிகளும், தாங்களும் முடித்துக்கொண்டு அழகுபார்த்தல், தாங்கள் வளர்க்கும் கிளி, நாகணவாய்ப்பறவை முதலியவைகட்குப்பாலன்னம், பழம் முதலியவைகளை யூட்டுதல், அவைகளோடு கொஞ்சிக்குலாவுதல், பந்தாடுதல் முதலியவைகளையும் செய்து இத்துணைத் தேகப்பயிற்சியினால் தங்கள் சரீரத்தைச் சுகத்துடன் வைத்திருந்தார்கள். இவ்விளையாட்டுகளைச் சங்கநூல்களிலும் கூறியுள்ளது. அவைகளில் பந்து என்பதற்குக் கந்துகமெனக்கூறப்பட்டுள்ளது.

இன்னும் நம் சங்கநூல்களில் தங்களுக்கு ஒழிவு நேர்ந்த காலத்திலும், தங்கள் ஊர்களில் துர்க்குறிகள் காணப்படும்போதும் அவ்வூரிலுள்ள சிலபக்தியுடையபெண்கள் ஒன்றுகூடி குரவைக் கூத்து ஆடுவது இயல்பாகவிருந்தது. குரவைக்கூத்து என்பது

எம்பெருமான் திருநாமங்களையும், புகழையும் குறித்துப்பாடிக் கொண்டு ஏழுபெண்கள் கைகோர்த்து ஆடுதல். இதனால் தேகப் பயிற்சியையும், பக்தியாகிய ஆன்மப்பயிற்சியையும் நபெண்மணிகள் பெற்றுவந்தார்கள். இது கோவலன் மதுரையில் சிலம்பின் காரணமாகப்பாண்டியன் கட்டளையினால் கொல்லப்பட்டபோது கண்ணகி தங்கியிருந்த இடைச்சேரியில் சிலதுர்க்குறிகள் காணப் பட, இடைப்பெண்கள் ஒருங்குகூடி;

[1] கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்று நம்மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றை யந்தீங்குழல் கேளாமோ தோழீ

[2] கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லை நம்மானுள் வருமே லவன்வாயிற்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ
தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
யணி நிறம் பாடுகேம் யாம்

[3] அறுபொருளிவனென்றே யமரர் கணந்தொழுதேத்த
வுறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
யுண்டவாய் களவினாலுறி வெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே
பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே

எனக்கூறியாடும் குரவைக்கூத்தினால் நன்கு விளங்கும். இன்னும்

நாடிக் கொண்டாள் குற்றநயந்தாண் முனிவாருள்
ஊடிக் காணக்காட்டு நலத்தா ருடனில்லாள்
தேடித் தேடிச்செய்த செழும்பூ நறுமாலை
சூடிச் சூடிக்கண்ணடி நோக்கித்து வள்வாளும்

என பூக்கொய்ப்படலத்திலும்

பெற்றுத் தளிர்க்கைச்சங்கம் வண்டொடு புலம்பியார்ப்ப
எற்றிநீர் குடையுந்தோறு மேகலை நல்குளின்றங்
கற்றமே கலைகளிங்கச் சேறடி கௌவக்காவிற்
சுற்றிய நாகமென்று துணுக்கத்தாற் றுடிக்கின்றாரும்"

"ஆன தூயவ ரோடட ருடிஞர்
ஞான நீரவ ராகுவர் நன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு காறின வேறினி வேண்டுமோ"

என நீர்விளையாட்டுப்படலத்திலும் கம்பர் கூறியிருப்பதும்,

"மங்கையர் செறிதலு மல்கு நீரிடைப்
பங்கயச் செழுமலர் தாழ்தல் பாவையர்
திங்கள் வாண்முகத் தெழிற்குடைந்து தேன்கமழ்
பொங்கு தண்புன லிடையொழித்தல் போலுமால்"

என நைடதத்தின் புனல் விளையாட்டுப்படலத்தில் அதி வீரராமபாண்டியர் அழகுபட புனைந்திருப்பதும் இங்குநோக்கத்தக்கதாகும்.

தற்காலத்தில் ஏழை குடும்பத்தவர்கள் அதிக வேலையினாலும் நடுத்தரகுடும்பத்தவர்கள் மிகக்குறைந்த வேலையினாலும், செல்வக்குடும்பத்தவரும், மூளை வேலைசெய்கின்றவர்களும தேகப்பயிற்சியே யில்லாமையினாலும் எப்பகுதியினரும் சரியான தேகசுகமின்றி இடைத்தற்கரிய மரணிட சரீரத்தை வீணே போக்கத்தக்கவர்களாகின்றார்கள். நம்பெண்பிள்ளைகள் பாடசாலைகள் சிற்சிலவற்றில் பந்தாடுதல் முதலிய சிலவிளையாட்டுகளை வைத்துள்ளார்களேயாயினும் அதுவும் அவ்வளவு திருப்திகரமானதன்று. நம்பெண்மக்களில் பெரும்பான்மையோர் தேகப்பயிற்சியின் அருமைதெரியாமலே, படிப்பில் மாத்திரம் தங்கள் மனத்தைச் செலுத்திப்பின் பலவகை நோய்களுக்கும் உட்படுகின்றார்கள்.

நங்கோதையார் அம்மனமின்றி அதிகாலையில் படுக்கையைவிட்டெழுதல், நீர்விளையாடுதல், பந்தாடுதல், தான் அருமையாய்வளர்க்கும் கிளி முதலியவைகட்கு இன்னமுதூட்டுதல் முதலியவற்றில் தன் காலத்தை இன்பமாய்க்கழித்துத் தேகசுகத்தைத் தேடிக்கொண்டதாக அவர் பாசுரங்களிலே கூறுகின்றார். அதாவது;

"பந்தார் விரலி! யுன்மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்" என்றும்
"கோழி யழைப்பதன் முன்னம்
குடைந்து நீராடு வான் போந்தோம்".
என்றும்

"கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசினபேச் சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும பிறப்பும கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங் குழலாய்ச்சியர் மத்தினால்
ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ?" என்றும்,
"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்" என்றும்

"கடக்கவிழ்தாமரைப் பொய்கைத்தாள்களெம் காலைக்கதுவ விடத்தேளெறிந்தாலேபோல் வேதனை ஆற்றவும் பட்டோம்" என்றும், "நீரிலே நின்றயர்கின்றோம் நீதியல்லாதன செய்தாய்" என்றும் இவர் திருவாய் மலர்ந்துள்ளவைகளைக்கூர்ந்து நோக்குவோமாயின நம்கோதையார், தன் இளமை வாழ்க்கையை எத்துணை இன்பமாகவும, சுகமாகவும் கழித்தனர், என்பது புலப்படும், இவ்விதவிளையாட்டுக்களினாலேயே இவர் தேகப வன்மையடைந்து பிற்காலத்து வாழ்க்கைக்குச் செப்பமையுடனிருந்ததென யூகிக்க வேண்டியிருக்கிறது. இவர் அதிகாலையிலேயே சுறுசுறுப்புடன் எழுந்து தன்கருமங்களை முடித்து எம்பெருமானை வழிபட்டாரென்பதற்கு அங்ஙனம் துயிலினின்று எழாததோழிகளை

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான்தந்தானோ

என இழித்துக் கூறியதே போதிய சான்றாகும்.

மக்களுக்கு அழகு இருவகைப்படும். அதாவது இயற்கையழகு, செயற்கையழகு என்பதாகும். இவ்வியற்கை யழகு பெரும்பான்மையும் ஆன்மாவைச் சார்ந்ததாயும் செயற்கையழகு தேகத்தைச்சார்ந்ததாயுமிருக்கும். ஆனால், நம்மனோர்கள் அநேகமாய் அவயவங்கள் ஒன்றிற்கொன்று ஒத்தனவாயமைந்து தெளிவுற்றுப் பார்ப்பவர்கண்களுக்கு அழகனாதுள்ளவர்களை இயற்கையழகுடையவர்கள் என்றும், அஃதின்றி வெறும் ஆடையணிகளால் மாத்திரம் அழகுபடுகின்றவர்களை செயற்கையழகுடையவர்களென்றும் கூறுகின்றார்கள்.

இதையுற்று நோக்கின் இரண்டும் சரீர அழகாகவன்றோ முடியும் என நினைவார்க்குச்சிறிது கூறுவாம். பிறக்கும்போதே அவயவக்குறைவின்றி பிறக்கின்றவர்களைப் பூர்வ புண்ணியஞ்செய்தவர்களென்றும், அஃதில்லாதாரை பூர்வபாபஞ்செய்தவர்களென்றும் அவ்வாறே கூறுகின்றோம். அதுவே இயற்கையழகுடன் பிறக்கின்றவர்களுக்கும் அமையும். இங்ஙனம் பூர்வபுண்ணியத்தினால் அழகு பெறுவதென்றால் அப்புண்ணியம் ஆன்மாவைச்சார்ந்தன்றோ வந்திருத்தல்வேண்டும். ஆதலால் இயற்கையழகு ஆன்மாவைச் சார்ந்ததெனக்கூறினும் இதன்றியும், "மனம்போல வாழ்வு" என்றபடி பிறந்தபிறகும் அவரவர்கள் எண்ணத்திற்கும், செய்கைகளுக்கும் இல்வாழ்க்கைக்கும் தக்கவாறு தேக வொளியும் உருவக்கெம்பீரமும், முகப்பிரகாசமும் அமைவதுண்டு. மனத்தூய்மையைக் கெடுக்கின்ற பொய்மை, வஞ்சனை, அழுக்காறு, கவலை முதலிய குற்றங்களை யொழித்து தன்னலம் பாராட்டாமல் யாவருக்கும் நன்மையேசெய்யும மனத்தையுடையவராய் எப்போதும் எம்பெருமானையே துதித்துக்கொண்டு ஞானமார்க்கத்தில் ஒழுகுகின்றவர்கள்,

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்றவாறு மனத்தூய்மையையே தங்கள் தேக ஒளியாய்க்கொண்டு மேல் ஆனந்தத்திலாழ்வார்கள். இதற்கு;

ஐயமருந்திவை யுண்ணென்று மாதராட்டுஞ் செல்வம்
ஐயமருந்தினைப் போதே யவரின்ப மாதலினால்
ஐயமருந்தியக் கந்துறு காமுன்னரங்கற் கன்பாய்
ஐயமருந்தியும் வாழ்மின் கண்மேலுமக் கானந்தமே'

என பிள்ளைப்பெருமாளய்யங்கார் திருவாய் மலர்ந்தருளியதே தக்க உதாரணமாகும். இவர்கள் எவ்வளவு வறுமையுற்றிருப்பினும் இவர்கள் மனத்தின் கணுள்ள ஞான ஒளி குன்றாதாகையால் அதன் காரணமாக உண்டாகின்ற தேகவொளியும் குறையாமல் இவரைக்காண்கின்ற பிறருக்குத்தங்கள் பெருந்தன்மையை நன்கு புலப்படுத்துவர். இதை இலங்கையில் துக்கக்கடலில் மூழ்கியிருந்த சீதாபிராட்டியைக் கண்டுவந்த அநுமான் அவள்பெருந்தன்மையை இராமபிரானிடம் சொல்லும்

“ உன்பெருந்தேவி யென்னு முரிமைக்கு முன்னைப்பெற்ற
மன்பெரு மருகியென்னும் வாய்மைக்கு மிதிலைமன்னன்
றன்பெருந் தனையையென்னுந் தகைமைக்குந் தலைமைசான்ற
வென்பெருந் தெய்வமையா வின்னமுங் கேட்டியென்பான் ”
“ விற்பெருந் தடந்தோள் வீர! வீங்கு நீரிலங்கைவெற்பி
னற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லே
னிற்பிறப் பென்பதொன்று மிரும்பொறையென்பதொன்றுங்
கற்பெனும் பெயரதொன்றுங் களிநடம்புரியக் கண்டேன் ”. —
என்னும் இக்காவியங்களினாலேயே நன்குணரலாம்.

இத்தகைய பரிசினை குணவொளியைக்கண்டுதான், காட்டைத்துறந்த எளியவர்கள்போன்ற மதுரைக்குச்சென்ற கோவலன், கண்ணகியாகிய இவர்களைக்கண்ட கவுந்தியடிகள்

“ உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பு
முடையீ ரென்னோ வுறுகணாளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென் ”

எனக்கூறினர் இங்ஙனம் மனத்தின் ஞானஒளியே முக வொளியாய்ப் பெற்றிருந்த நம்கோதையார், கார்காலத்து மேக ங்களோடு எம்பெருமான் வருவான் வருவான் என எண்ணிக் கொண்டிருந்த இவர் அங்ஙனம் வாராமையால்மேகங்களைபார்த்து

" ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்
எளிமையால் இட்டென்னை ஈடழியப் போயினவால் ".

எனக்கூறுகின்றனர். இதனால் இவர் இயற்கையழகின் தனி மை நன்கு விளங்குகிறது.

இதன் நீயும் ஆன்மா இயற்கையழகையடைவதற்கு ஓர் முக் கிய சாதனமுமுண்டு. அதாவது தான் எம்பெருமானுக்குத்தன்னு லான கைங்கரியத்தைச்செய்து அதன்பயனுக்காகத்தான் அவனி டம் கைநீட்டாது, நம்மைவிட அறிவிலோ, கல்வியிலோ, சிறந்த பெரியோர்கள் நம்மிடம் யாதவதொன்றிற்கு எதிர்பார்க்கும் போது அவர்கள் விரும்பியபொருளையும்கொடுத்து, வேறேதே னும் கேட்பரோ என அவர்பணிக்கும் எதிர் நோக்கியிருத்தல் போல, எம்பெருமான் தன்னிடம் பணிகொண்டதற்குத்தான் பின் னும் அவனுக்கு அடிமைசெய்வுதாகிய கூலியைக்கொடுக்கவேண் டும் என்பதற்கு ஸ்ரீவசனபூஷணத்தில்

" தான்கையேலாதே அவனைக் கையேற்கப் பண்ணுகை
கொடுத்துக் கொள்ளாதே கொண்டதுக் குக்கைக்கூலி
கொடுக்கவேணும் " எனக்கூறியுள்ளது. இதற்கு

" இன்றுவந்து இத்தனையும் அமுதுசெய்திடப் பெறில்நான்
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப்பின்னும் ஆளும்செய்வன் "

என நம்கோதையார் திருவாய் மலர்ந்தருளியதே தக்கசான் றாகும்.

" கற்ற தனாலாய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் " எனதிருவள்ளுவரும்,

" உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண் "

என அவ்வைப்பிராட்டியாரும் கூறியதற்கேற்ப நம்கோதை யார் இயற்கை ஆன்ம அழகை வாய்ந்துள்ளவர் எனத்தெற்றெனப் புலப்படுகின்றது

இயற்கையழகைப்போன்று செயற்கையழகு பயனின்றேனும் அச்செயற்கையழகைப் பெறுதற்கும் தக்கவசதிகள் கோதையார்க்கிருந்ததெனபதும், அங்ஙனமே அவர்கொண்டனரென்பதும்

" பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த
புதுவையர் கோன்பட்டன் கோதை "

எனலும வாக்கியத்தாலும்,

" சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம் "

என்னும் பாட்டினாலும் அறியக்கிடக்கின்றது.

பக்கள் தேகவன்மையோடிருப்பதற்கு உணவே இன்றியமையாததன்றோ? நம் பெண்மக்களில் சிலர் சிறிது படித்தவுடனே வேலைசெய்வது மிகக்குறைவென நினைத்துத் தனக்குச்சமையல் செய்யவே தெரியாதெனக்கூறி வேலைக்காரர்களையே எதிர்பார்த்துக்கொண்டு காலந்தள்ளுகின்றார்கள். நமகோதாபிராட்டியாரோ தானே போனகம் முதலியவைகளைச்செய்ய கற்றிருந்தனர் என்பதை,

" காயுடை நெல்லொடு கரும் பமைத்துக்
கட்டி யரிசி அவல மைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
மன்மதனே உன்னை வணங்குகின்றேன்
தேச முன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக் கைகளால் என்னைத் தீண்டும்வண்ணம்
சாயுடை வயிறும் என் தடமுலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே "

என்னும இப்பாசுரத்தாலறியலாம.

(தொடரும்)

S. கிருஷ்ணவேணியம்மாள்.